

# மாநாடு!

## பார்வை!

கின்றன. இவற்றில் டோக்கன் சிஸ்டப்படி உணவுகள் வழங்கப்படுகின்றன. சைவ சாப்பாட்டில் இருந்து அசைவ உணவு வரை அனைத்தும் இங்கு கிடைக்கும். வெஜிடபிள் பிரியாணி, புளிசாதம், எலுமிச்சை சாதம் இந்த மூன்றில் ஏதேனும் இரண்டும், கூடவே ஒரு பாக்கெட் தயிர் சாதம், ஒரு பாட்டில் தண்ணீர், கொஞ்சம் சிப்ஸ் ஆகியவையும் முப்பது ரூபாய்க்குக் கிடைக்கின்றன. அசைவ உணவு மெனுவில் மட்டன் பிரியாணி, ஆம்லெட், எலும்புக் குழம்பு, ஈரல் வறுவல், ஒரு பாட்டில் தண்ணீர் ஆகியவை ஐம்பது ரூபாய்க்கு கிடைக்கிறது. ஒரே நேரத்தில் ஐம்பதாயிரம் பேர் வரை சாப்பிடும் அளவுக்கு ஏற்பாடுகள் களைகட்டி இருக்கின்றன. இந்த விருந்தோம்பலில் மட்டும் சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட பிரபல உணவகங்கள் பங்கேற்றுள்ளன.



மாநாட்டுக்கு வரும் பொதுமக்கள் வயிறாரச் சாப்பிட்ட பிறகு அடுத்து அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குக்கு செல்லலாம். இந்த அரங்கின் வாயில் முன்னே அக்காலத் தமிழர்களின் வீர விளையாட்டுகள் மற்றும் கலைகள் சிலையாக வடிவமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக ஜல்லிக்கட்டை நினைவுபடுத்தும் விதமாக மாட்டை அடக்கும் வீரரின் சிலையும், பெண்கள் குச்சிப்புடி நடனம் ஆடுவது போன்ற சிலையும் தத்ரூபமாக அமைக்கப்பட்டுள்ளன. இந்த அரங்கில் சிந்து வெளி நாகரீகம் தொடங்கி, ஆதித்தமிழர்களின் வாழ்க்கை முறை அவர்கள் பயன்படுத்திய பொருட்கள் போன்றவை குறித்த கண்காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

இந்த அரங்கங்களில் முக்கிய அரங்கம் எனறு சொன்னால், 1956ல் கலைஞர் கருணாநிதி எழுதிய குறளோவியம் குறித்த ஓவியக் காட்சிகள் கொண்ட அரங்கம் தான். கலைஞர் கருணாநிதியின் தந்தை முத்துவேலர் ஒருநாள் வீட்டில் பரண் அருகே அமர்ந்து வேலை செய்து கொண்டிருந்த போது, பரண் மேல் இருந்த ஒரு பாம்பு திடீரென முத்துவேலரின் கழுத்தில் மாலை போல் விழுந்துள்ளது. இதைப் பார்த்த அஞ்சுகம் அம்மையார் பதற, அதிர்ச்சியடையாமலும், பதற்றப்படாமலும், நிதானமாக முத்துவேலர் அமர்ந்திருக்க, சிறிது நேரத்தில் அந்தப் பாம்பு தானாக இறங்கிச் சென்றது. இதை தனது மகன் கருணாநிதிக்கு அஞ்சுகம் அம்மையார் சிறிது காலம் கழித்துச் சொல்ல அதை அப்படியே தனது குறளோவியத்தில் கொண்டு வந்தார் கலைஞர். அந்தக் காட்சி இங்கு அமைக்கப்பட்டுள்ளது.



அதைப்போல போர்க்களத்தில் தலைவனுக்காக உயிர்விடும் வீரனின் மார்பைப் பிடித்து தலைவன் அழுது கொண்டிருக்கும் காட்சியும் குறளோவியமாக சொல்லப்பட்டு இருக்கிறது. அந்த ஓவியமும் அரங்கத்தில் இடம்பெற்றுள்ளது. இப்படி எண்ணற்ற ஓவியங்கள் பல வேறு சிறப்புகளைத் தாங்கிப் பிடித்து அரங்கத்தில் மிளிர்ந்து கொண்டிருக்கின்றன.

இதற்கு அடுத்தபடியாக சிந்து சமவெளி நாகரீகம் பற்றிய கண்காட்சி அரங்கம். சிந்து சமவெளி நாகரீகத்தில் வாழ்ந்த மக்கள், 39 அடி நீளமும், 23 அடி அகலமும், 82 அடி ஆழமும் கொண்ட குளியல் குளத்தை அமைத்துள்ளனர். அதில் இறங்கிப் போய் குளிக்கின்ற அளவுக்குப் படிக்கட்டுகள், அருகிலேயே குளியல் அறைகள் என ஒரு பக்கம் இருந்தாலும், நல்ல தண்ணீர் ஒரு பக்கமும், அசுத்த நீர் மறு பக்கமும் வெளியேறும் விதமாக வடிவமைத்து, இன்றைக்குள்ள ஆர்க்கிடெக்சர்கள், சிவில் இன்ஜினியர்களையே வியப்பில் ஆழ்த்தும் அளவுக்கு சிந்து சமவெளி நாகரீக மக்களின் புத்திக்கூர்மை இருந்து இருக்கிறது. அந்தக் குளக்கரையின் மாதிரி இந்த கண்காட்சி அரங்கில் வைக்கப்பட்டுள்ளது. சுமார் நான்காயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்த சிந்து சமவெளி நாகரீகம் பற்றிய தொகுப்புகளும் இடம்பெற்றுள்ளன. அன்றைக்கு இருந்த மொழி என்ன என்பது பற்றியும், அது சம்பந்தமான ஆராய்ச்சி குறித்த விவரங்களும் இக்கண்காட்சியில் இடம்பெற்று பிரமிக்க வைக்கின்றன.

இதையடுத்து கல்வெட்டுகள் குறித்த அரங்கம். அந்த அரங்கில் கி.பி.1818ல் அப்போதைய சென்னை மாகாண கலெக்டராக இருந்த எல்லீஸ் என்பவர் கண்டெடுத்த கல்வெட்டுகள் குறித்த விவரங்கள் இடம்பெற்றுள்ளன. அதில் தமிழகத்தின் நீர்வளம் குறித்து சொல்லப்பட்டது பொறிக்கப்பட்டுள்ளது. ஏழு கிணறுகளில் இருந்து இந்தக் கல்வெட்டுகள் கிடைத்தன என்ற தகவலும் இடம்பெற்றுள்ளது. இதுதவிர பழங்கால கல்வெட்டுகள் மற்றும் அகத்தியர் வைத்தியம், கந்த புராணம், ராமாயண வசனம், பெரியபுராணம், மணிமேகலை, திருக்குறள், புறநானூறு, சீவகசிந்தாமணி உள்ளிட்ட காப்பியங்கள் குறித்த ஓலைச்சுவடிகளும் கல்வெட்டுகளும் இக்கண்காட்சியை அலங்கரிக்கின்றன. கல்வெட்டுகளின் வாயிலாக எப்படி எழுத்து வளர்ச்சி ஏற்பட்டது என்பதையும், சோழர், கொங்கு சோழர் காலத்துக் கல்வெட்டுகள் எப்படி இருக்கும் என்பதையும் இங்கே நாம் பார்க்க முடியும்.

பண்டைய காலத் தமிழர்கள், அதாவது ஆதி காலத் தமிழர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பது குறித்த விவரங்களும் காட்சிகளாக அமைக்கப்பட்டுள்ளன. அவர்கள் பயன்படுத்திய